முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1227

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.02.2023, செவ்வாய்கிழமை

1. ஓங்கார மாதவ ராஜனே
ஓங்காரக்குடில் படைத்த தேசிகனே
ஓங்காரஞான உலகம் அமைக்க
ஓங்காரமாய் உலகமெங்கும் உபதேசம் அருளுகின்ற
2. அருளுகின்ற ஞானியே உந்தனுக்கு
அறிவிப்பேன் சுப்ரமணியர் யானும் இனிதே
வரமென ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் தை மாதம் 24 ம் நாள் 07.02.2023, செவ்வாய்கிழமை)
வழங்குவேன் உலகோரும் உன்வழி கடைத்தேற
3. தேறவே அரங்கன் தருகின்ற தர்மமும்
தேசிகனார் உலகமெங்கும் வருகின்ற ஞானமும்
மாறுதலை உலகினில் செய்தேதீரும்
மகத்துவம் கொண்ட ஞானவான்களையும் படைத்தேதீரும்
4. தீருமே எங்கும் நடக்கின்ற தீவினைகொடுமைகளை
தீர்த்து உலகோர்க்கு மனபலம் தந்து
வறுமைபோக்கி உலகமெங்கும் வளமாக்கி
வையகத்தை மாற்றும் அரங்கன் சேவைநோக்கம்
5. நோக்கத்தில் உலகோர் நிலைத்து
நின்று அடி பணிந்து
ஊக்கமுடன் அரங்கன் சேவை வளர்த்து
உலகமெங்கும் சன்மார்க்க நெறியை
6. நெறிதனை வேதமாக கொண்டுச்செல்ல
நிலஉலகில் சடுதி மாற்றம்
ஆறுமுக அரங்கனால் நடந்தேறும்
அரங்கனே கலியை மாற்றும் மாதவசி
7. மாதவசி வையகத்தே வலம்வர
மண்ணுலகம் ஞானயுகமாக மாற்றம் கண்டு மிகைபட தர்மவான்கள் நிறைந்த
மேலான ஞானிகளே ஆளுகின்ற மகத்துவமிக்க காலமாக
மண்ணுலகம் மாறி ஞானலோகமும் ஞானஆட்சியுமாக அற்புதம்காணும்
8. காணவே ஓங்காரக்குடில் நோக்கி
கட்டாயம் உலகோர் வருதல் வேண்டும்
ஞானமாக அரங்கன் உபதேசத்தை நாளும் ஏற்றுத்தொடர
இனிதே சடுதி மாற்றம் இவ்வுலகம் கண்டு நிறைவுகாணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–